DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 125/2024 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | அசோக்ராஜ் |
| Father's /Husband Name | : | வள்ளிக்கண்ணன் |
| Village | : | கும்பகோணம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 32 |
| Occupation | : | வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 02nd day December 2024.
Accused present. App and defence counsel present.

**முதல் விசாரணை:–**

அ.சா.1 எனது நண்பர். ஆஜர் எதிரியை எனது அண்ணன். கடந்த 24.09.2023ம் தேதி, காலை 09.30 மணியளவில், நானும் அ.சா.1–ம் கும்பகோணம், பழைய மீன் மார்க்கெட், சாஸ்திரா காலேஜ் அருகே உள்ள ஆவின் டீக்கடையில் டீக்குடித்துக்கொண்டிருந்தபோது எதிரி அங்கு வந்து எதிரியின் மனைவி ஜுவனாம்ச வழக்கு தாக்கல் செய்ய அ.சா.1–தான் காரணம் எனக்கூறி அ.சா.1யை குச்சிக்காரி மகனே, தேவிடியா மகனே என்று திட்டி, எதிரி அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் அ.சா.1யை வெட்டினார். அப்போது அ.சா.1 தடுத்ததில் அவரது இடது கை மணிக்கட்டில் இரத்தக்காயம்கொட்டியது. அ.சா.1 சத்தம் போடவே எதிரி அ.சா.1யை பார்த்து இந்த முறை தப்பித்துவிட்டாய், அடுத்த முறை உன்னை சக்கை சக்கையாக வெட்டி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார். சம்பவயிடத்தில் ஆவின் டீக்கடை உரிமையாளர் கமல கண்ணன் இருந்தார். இரத்தக்காயத்துடன் இருந்த அ.சா.1யை அவரது மாமா வீரன் என்பவர் ஆட்டோவில் அழைத்து சென்று கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-M.Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.